


18.11. 2024

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில், ஜி-20 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.
- இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவாவதற்கான சிறப்பான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்திற்கான மத்திய அரசின் வருவாய் வரிபகிர்வு 50 விழுக்காடாக உயர்த்தப்பட வேண்டுமென்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 88-வது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
- வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் ஜி-20 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக பல்வேறு நாட்டு தலைவர்களுடன் பிரதமர் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

சர்வதேச பிரச்சனைகள் குறித்த இந்தியாவின் நிலைப்பாடு, புதுதில்லியில் நடைபெற்ற ஜி-20 தலைவர்கள் மாநாட்டில் எட்டப்பட்ட பிரகடனம்,

தென்னாடுகளின் குரல் தொடர்பான உச்சிமாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து பிரதமர் எடுத்துரைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

“நீதிமிகு உலகை கட்டமைத்து, நிலையான புவியை உருவாக்குவது” என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு ஜி-20 உச்சிமாநாடு நடைபெறுகிறது.

அமெரிக்க அதிபர் ஜோபைடன், சீன அதிபர் ஸீ ஜின் பிங் உள்ளிட்ட தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

ஜி-20 இந்திய தலைமைத்துவத்தின் கீழ் எட்டப்பட்ட முன்னுரிமைகளை முன்னெடுத்துச் செல்வதால் பிரேசில் உச்சி மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.

❖❖❖❖❖❖❖

டாக்டர்.எல்.முருகன்

மத்திய அரசின் சிறப்பான திட்டங்களால் வரும் 2047-ம் ஆண்டிற்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கும் என்று, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர்.எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் டாக்டர். எம்.ஜி.ஆர். நிகர்நிலை மருத்துவ பல்கலைக்கழகத்தின் 33-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், நூற்றாண்டு சுதந்திர தின விழாவின் போது நம்நாடு வல்லரசாக திகழும் என்றார்.

மத்திய அரசின் புதிய கல்விக்கொள்கையின் அவசியம் குறித்து மாணாக்கரிடையே எடுத்துரைத்த அவர், கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவம், தொழில்நுட்பம் சார்ந்த கல்வித்துறை மேம்பாடு அடைய மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும், பட்டம் பெறும் மாணாக்கர் வரும் காலங்களில் புதியதொரு வலிமையான பாரதத்தை கட்டமைக்க சேவையாற்ற வேண்டும் என்றும் டாக்டர் எல்.முருகன் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

ஆயுஷ்மான் வை வந்தனா

70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான மத்திய அரசின் புதிய ஜன் ஆரோக்கியா, புதிய ஆயுஷ்மான் வயவந்தனா சுகாதார காப்பீடு திட்டத்தின் கீழ் 10 லட்சத்திற்கும் அதிகமானோர் இணைந்து சாதனை படைத்துள்ளனர்.

இத்திட்டம் திட்டம் தொடங்கப்பட்டு 3 வாரங்களுக்குள் இந்த புதிய சாதனை எட்டப்பட்டுள்ளது குறித்து மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

இந்த திட்டத்தில் 4 லட்சம் பெண்கள் இணைந்துள்ளதாக கூறியுள்ள அமைச்சகம், இதன் மூலம் 9 கோடி ரூபாய் மதிப்பிலான சிகிச்சைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதய நோய்கள், இடுப்பு எலும்பு முறிவு, எலும்பு மாற்று சிகிச்சை, பித்த பை அகற்றுதல், கண்புரை நோய், பக்கவாதம் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 400 பெண்கள் உட்பட, 4 ஆயிரத்து 800 மூத்தகுடிமக்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் கடந்த 29-ம் தேதி தொடங்கப்பட்ட இந்த திட்டம், எவ்வித வருமான வரையறையும் இல்லாமல் மூத்த குடிமக்கள் பயன்பெற வழிகோலுகிறது.

❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

தேசிய இளையோர் விழா வரும் ஜனவரி 11, 12 தேதிகளில் கொண்டாடப்படும் என்று மத்திய இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், வளர்ச்சியடைந்த பாரதம் இளைய தலைவர்கள் பேச்சுவார்த்தை நிகழ்வாக இது கொண்டாடப்படும் என்றார்.

இதன்மூலம் பிரதமர் திரு.நரேந்திரமோடி முன்னிலையில் வளர்ச்சிக்கான தொலைநோக்கு திட்டத்தில் இளையோர் தத்தம் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும் என்றார்.

நாடுமுழுவதிலுமுள்ள இளையோர்களின் திறன்களை கண்டறிந்து அதனை செறிவூட்டுவதோடு, இளையோர் தேச தலைவர்களுடனும், உலகத்தின் முன்னணி நிபுணர்களுடனும் உரையாட இது வழிகோலும் என்றார்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை முன்னெடுத்து சென்று இளையோர் ஆளுமை பெற இப்பேச்சுவார்த்தைகள் பயனளிக்கும் என்று டாக்டர் மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

தேர்தல்

மகராஷ்டிர மாநிலத்தில் மொத்தமுள்ள 288 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரேகட்டமாகவும்,

ஜார்கண்ட்டில் 38 தொகுதிகளுக்கு 2-வது கட்டமாகவும் நாளைமறுநாள் நடைபெறும் வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் இன்றுமாலை ஓய்கிறது.

தேர்தலை ஒட்டி அரசியல் தலைவர்கள் இறுதிகட்ட வாக்குசேகரிப்பில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

இத்தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் வரும் 23-ம் தேதி எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

ஆணைய குழு கூட்டம்

நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு சிறந்த நிர்வாகத்துடன் திறம்பட செயலாற்றும் தமிழகம் போன்ற மாநிலங்கள் வளர்ச்சியடையும் வகையில், நிதி பகிர்வு முறை மாற்றப்பட வேண்டுமென்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற 16-வது நிதி ஆணைய குழு கூட்டத்தில் இன்று உரையாற்றிய முதலமைச்சர், வளர்ந்து வரும் தமிழகம் போன்ற மாநிலங்களுக்கான மத்திய அரசின் வருவாய் வரி பகிர்வு பங்கு 50 விழுக்காடாக உயர்த்தப்பட வேண்டுமென்று கோரியுள்ளார்.

இவ்வாறு வழங்கப்பட்டால் மட்டுமே மாநிலங்கள் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி நிதி மேலாண்மையுடன் தனித்துவமாக செயல்பட முடியும் என்று கூறினார்.

.. வாய்ஸ் ..

பல்வேறு முன்னோடி திட்டங்களை அறிமுகப்படுத்தி நாட்டிற்கே வழிகாட்டும் தமிழகத்திற்கான வரிபகிர்வு, வீழ்ச்சியை சந்தித்து வருவது குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

சமச்சீரான வளர்ச்சியை எதிர்கொள்ளும் வகையில், சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பதன் மூலமாகவே வளர்ச்சியை தக்கவைக்க முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

குறுகியகால கண்ணோட்டத்துடன் செயற்கையாக உருவாக்கப்படும் நிதி பகிர்வு முறை எதிர்காலத்தில் பலன்களை தராது என்றும் எடுத்துரைத்தார்.

எனவே, நிதி பகிர்வில் ஒருபுதிய அணுகுமுறையை 16-வது நிதிக்குழு வடிவமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இயற்கை பேரிடர், முதியோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, நகர்ப்புற கட்டமைப்பு உள்ளிட்ட சமூக முதலீடுகளுக்கு தேவையான நிதி ஆதாரத்தை

தமிழகத்திற்கு, நிதிக்குழு பரிந்துரைக்க வேண்டும் என்று முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

வ.உ.சிதம்பரனார்

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 88-வது நினைவுநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் அன்னாரின் தியாக வாழ்வை வணங்குவோம் என குறிப்பிட்டார்.

சென்னை கிண்டியில் உள்ள அன்னாரது திருவுருவ படத்திற்கு மாநில அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நெல்லையில் உள்ள மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு ஆட்சித்தலைவர் திரு. கார்த்திகேயன் உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖

போக்குவரத்துக் கழகம்

அரசு பேருந்துகளில் 90 நாட்களுக்கு முன்னதான முன்பதிவு திட்டம் இன்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக மாநில போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

பயணிகள் கடைசிநேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள 60 நாட்கள் என்பது 90 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

லாரி

தமிழ்நாட்டில் லாரிகளுக்கு கலப்பட டீசல் விற்பனை செய்பவர்கள் மீது, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, தமிழ்நாடு ரிக் உரிமையாளர் சம்மேளன தலைவர் எஸ்.எஸ். சுரேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆழ்குழாய் கிணரமைக்கும் தொழிலுக்குஅரசு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

மதுரை மாவட்டத்தில் இன்று நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்ட ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா, 8 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற குறைதீர்நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, சாலை, குடிநீர் வசதி தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள துறை அலுவலர்களை ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் பெய்த கனமழையால் 9 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி பாதிப்படைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

தேனி வாய்ஸ்

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

குடகனாறு

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் குடகனாறு அணை நிரம்பும் தருவாயில் இருப்பதால், கரையோர மக்களுக்கு 3-ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

27 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணை 26 அடியை எட்டியவுடன் உபரிநீர் வெளியேற்றப்படும் என்பதால் இந்நடவடிக்கை.

தற்போது அணைக்கு 160 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மயிலாடுதுறை, திருவாரூர், நாகை, தஞ்சை, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்றும், நாளையும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

கால்பந்து

இந்தியா மலேஷியா நாடுகளுக்கு இடையிலான நட்புணர்வு கால்பந்து போட்டி ஹைதராபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெறுகிறது

இதனிடையே சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜார்கண்ட் 5-3 என்ற கோல் கணக்கில் பீஹாரை வென்றது

❖❖❖❖❖❖❖

புரோ கபடி லீக்

புரோ கபடி லீக் போட்டியில் இன்று தெலுகு அணி - ஹரியானா அணியையும்

பெங்களூரு அணி - மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖

ஹாக்கி

பீஹார் ராஜ்கிரில் நடைபெறும் 8-வது ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கி அரையிறுதி போட்டியில் நாளை இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

இறுதி போட்டி வரும் புதன்கிழமை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 5 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் வரும் 22-ம் தேதி தொடங்குகின்றன.

முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரும் வெள்ளிக்கிழமை பெர்த்தில் தொடங்குகிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.